<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

**<u>OS No. 15/2015</u>**

**நாள் : 08.11.2023**

**PW1 : ரத்தினம்**

**<u>4,5,8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1.** தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். கருப்பன்ன கவுண்டருக்கு அம்மினியம்மாள், ரத்தினம், செல்வமுத்து மற்றும் வெங்கடாசலம் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். இவ்வழக்கின் 2 வது பிரதிவாரி செல்வமுத்து இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். அவரது வாரிசுகளை நான் கட்சி சேர்த்துள்ளேன். அவரது மனைவி சிவகாமி, மகன் யுவராஜ் மற்றும் மனோஜ்குமார் ஆகியோரை கட்சி சேர்த்துள்ளேன். அம்மினியம்மாள் 2016 ஆண்டு இறந்துவிட்டார். தாவா சொத்தின் எனக்கு மூன்றில் ஒரு பாகம் பங்கு உள்ளது. செல்வமுத்து வகையராவுக்கும் மூன்றில் ஒரு பாகம் பங்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். 2009 ம் ஆண்டு என் தந்தை கருப்பண்னகவுண்டர் எனது சகோதரர் ஒரு தான செட்டில்மெண்ட் எழுதிகொடுத்ததாக சொல்லும் விபரம் பொய்யானது. என் தந்தை தான செட்டில்மெண்ட் எழுதிகொடுக்கும் அளவிற்கு உடல்நிலையும், மனநிலையும் இல்லை. என் தந்தைக்கு மூளையில் கட்டி ஏற்பட்டு அவருக்கு ஒரு பக்கவாதம் வந்துவிட்டது. மேலும், மனநிலையும் பாதிக்கப்பட்டிருந்தது. மருத்துவமனையில் உள்நோயாளியாக பல மாதங்கள் சிகிச்சையில் இருந்தார்.

2. அதற்கு மருத்துவ ஆவணம் நான் கொடுத்துள்ளேன். மேற்படி அவர்கள் தாக்கல் செய்த தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது. என் தந்தை கையொப்பம் செய்வார். என் தந்தை பதிவு அலுவலகத்தில் ரேகை எதுவும் வைக்கவில்லை. வழக்கு சொத்தில் வெங்கடாசலம் வழக்கிற்கு பின்னிட்டு கட்டிடம் கட்டியுள்ளார். எங்கள் ஆட்சேபனையை மீறி கட்டிடம் கட்டியுள்ளார். 06.04.2009 ம் ஆண்டு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அதில் நான் கையொப்பம் செய்யவில்லை. 30.04.2009, 15.05.2009 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆகியவை பொய்யானவை. எங்களுக்குள் நிரந்தரமாக எந்த ஒரு பாகபிரிவினை ஏற்படவில்லை. 2 ம் பிரதிவாதி வகையாராவுக்கு உண்டான பாகத்தை பிரித்துக்கொடுக்க ஆட்சேபனை இல்லை. பத்திரிக்கை விளம்பரம் 3 ம் பிரதிவாதி கொடுத்தது என்னை கட்டுப்படுத்தாது. தாவா நான் கூட்டு சுவாதீணத்தில் இருந்து வருகிறேன். 2 ம் பிரதிவாதியும், வாரிசுகளும் கூட்டு சுவாதீணத்தில் தான் இருக்கிறார்கள்.

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.11.08 18:10:09 +0530

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.11.08 18:10:16 +0530

Subordinate Judge,
Avinashi.